

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.09.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், இசிஜ சென்னை பேராயத்தின் பேராயர் கதிரொளி மாணிக்கம் மற்றும் இவாஞ்சலிகல் சர்ச் ஆப் இந்தியா நிர்வாகிகள் சந்தித்து, பேராயர் எஸ்றா சற்குணம் அவர்கள் இல்லம் அமைந்துள்ள சாலைக்கு அவரது பெயரை சூட்டி சிறப்பு செய்தமைக்காக நன்றி தெரிவித்தனர். உடன் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா மற்றும் பேராயர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.09.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளராக புதிதாகத் தேர்வு செய்யப்பட்டுள்ள மு. வீரபாண்டியனுக்கு வாழ்த்துத் தெரிவித்தார். உடன் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. ராசா, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஆர்.எஸ். பாரதி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

### 147-வது பிறந்த நாளை முன்னிட்டு

# திருச்சியில் தந்தை பெரியார் சிலைக்கு மாலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அணிவித்து மரியாதை!

## மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ‘சமூக நீதி நாள்’ உறுதிமொழி ஏற்பு!

**திருச்சி, செப். 17-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளான இன்று (17.9.2025) திருச்சி மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்கள்! மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் “சமூக நீதி நாள்” உறுதிமொழி ஏற்கிறார்கள்!**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தந்தை பெரியார் அவர்களின் 147வது பிறந்த நாளை முன்னிட்டு, இன்று (17.9.2025) காலை 10.45 மணியளவில் திருச்சி மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்கள். பின்னர் 11.00 மணியளவில் திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் “சமூக நீதி நாள்” உறுதிமொழி ஏற்கிறார்கள்.

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்கள் ஈரோடு மாவட்டத்தில் வெங்கட்ட நாயக்கர் - சின்னத்தாயம்மாள் தம்பதியருக்கு 17.9.1879 அன்று மகனாகப் பிறந்தார். சாதியப் பாகுபாட்டினைக் கண்டு வெகுண்டெழுந்து சமூக நீதி காத்திடவும், மனிதனுக்கு மனிதன் ஏற்றத் தாழ்வு இல்லை, ஆணும் பெண்ணும் சரி நிகர் சமம் என்பதை அடிப்படைக் கொள்கையாகக் கொண்டும், சாதி ஒழிப்பு, பெண் அடிமைத்தனம் ஒழிப்பு ஆகியவற்றிற்காகத் தொடர்ந்து போராடினார்.

1924ஆம் ஆண்டு கேரள மாநிலம் வைக்கத்தில் தீண்டாமைக்கு எதிராகப் போராடியதால் “வைக்கம் வீரர்” என்று மக்களால் அழைக்கப்பட்டார். இந்திய வரலாற்றிலேயே தீண்டாமையையும், சாதிக் கொடுமையையும் எதிர்த்து முதன் முதலாக நடைபெற்ற போராட்டம் என்ற சிறப்பை வைக்கம் போராட்டம் பெற்றது.

தந்தை பெரியார் சமூக நீதியை நிலை நாட்டுவதில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாய்த் திகழ்வதற்கு வழிகாட்டி, தனது இறுதி மூச்சு வரை சுயமரியாதைக் கொள்கைக்காகவே வாழ்ந்தார். தமிழ்நாட்டில் சமூக மாற்றத்தை உருவாக்கி, மக்களிடையே ஒற்றுமையை வளர்த்து, ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை மேம்படப் பெரும்பங்காற்றினார்.

தந்தை பெரியார் அவர்கள் படிப்பறிவின் மூலமே பகுத்தறிந்து விழிப்புணர்வு பெறமுடியும் என்பதைத் தன் இலட்சியமாகக் கொண்டு, குடியரசு வார இதழைத் தொடங்கினார். சமுதாயத்தில் நிலவிய ஏற்றத்தாழ்வுகளை ஒழித்திட சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார். மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் சுயமரியாதை உணர்வு தேவை என்பதை அனைவருக்கும் உணர்த்தினார்.

தந்தை பெரியார் அவர்கள் 95 ஆண்டு காலம் வாழ்ந்து தமிழினத்தின் எழுச்சிக்காகப் பாடுபட்டு, சுய மரியாதை, பகுத்தறிவு, சமூக நீதி ஆகிய அடிப்படைக் கொள்கைகளால், இன்றும் மக்களின் மனங்களில் வாழ்ந்து வருகிறார். 18ஆம் வயதில் தொடங்கிய அவரது பொது வாழ்க்கையானது, இறுதி மூச்சுவரை தொடர்ந்தது.

தமிழ்நாடு அரசின் சார்பில், கேரள மாநிலம், கோட்டயம் மாவட்டம், வைக்கத்தில் தந்தை பெரியாருக்கு நினைவிடம் அமைக்கப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்டத்தில் அவர் வாழ்ந்த வீடும் தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா இல்லமாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் பிறந்த நாளான செப்டம்பர் 17ஆம் நாள் தமிழ்நாடு அரசின் சார்பில் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அன்னாரின் பிறந்த நாள் “சமூக நீதி நாள்” ஆகக் கடைப்பிடிக்கப்படும், என 2021 இல் அறிவித்தார்கள். அதன்படி, செப்டம்பர் 17 ஆம் நாள் ஆண்டுதோறும் “சமூக நீதி நாள்” எனக் கடைப்பிடிக்கப்படுகிறது. அந்நாளில், தமிழ்நாடு முழுவதிலும் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களிலும் சமூக நீதி நாள் உறுதிமொழி எடுக்கப்படுகிறது.

இந்த ஆண்டில், திருச்சியில் நடைபெறும் தந்தை பெரியார் அவர்களின் 147 வது பிறந்த நாள் நிகழ்ச்சியில் முதலமைச்சர் அவர்களும், அமைச்சர் பெருமக்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர், காவல்துறை அதிகாரிகள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

### தந்தை பெரியார் பிறந்த நாள்

# “சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்பு”

## தலைமைக் கழகம் அறிவிப்பு!



“தந்தை பெரியாரின் ஒவ்வொரு பிறந்த நாளும் “சமூகநீதி நாளாக” கடைபிடிக்கப்படும் என்றும்; அப்பிறந்த நாள் அன்று “சமூகநீதி நாள் உறுதிமொழி ஏற்க வேண்டும்” என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 6.9.2021 அன்று சட்டப்பேரவையில் அறிவித்ததற்கிணங்க;

தந்தை பெரியார் பிறந்த நாளான 17.9.2025 அன்று காலை 10.30 மணி அளவில், அந்தந்த மாவட்டக் கழக அலுவலகத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் அறிவித்த பின்வரும் “சமூகநீதி நாள் உறுதிமொழி” ஏற்பு நிகழ்ச்சியினை நடத்திட வேண்டுமென அனைத்து மாவட்டக் கழகச் செயலாளர்/பொறுப்பாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அன்றையதினம் காலை 10.30 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள அறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் சிலை முன்பு, “சமூகநீதி நாள் உறுதிமொழி ஏற்பு” நிகழ்ச்சி நடைபெறும்.

**“சமூக நீதி நாள் உறுதிமொழி”**

- **‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்ற அன்பு நெறியும் - ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்ற பண்பு நெறியும் எனது வாழ்வியல் வழிமுறையாகக் கடைபிடிப்பேன்!**
- **சுயமரியாதை ஆளுமைத்திறனும் - பகுத்தறிவுக் கூர்மைப் பார்வையும் கொண்டதாக என்னுடைய செயல்பாடுகள் அமையும்!**
- **சமத்துவம், சகோதரத்துவம், சமதர்மம் ஆகிய கொள்கைகளுக்காக என்னை நான் ஒப்படைத்துக் கொள்வேன்!’**
- **மானுடப் பற்றும் மனிதாபிமானமும் ஒன்றே எனது இரத்த ஓட்டமாக அமையும்!**
- **சமூகநீதியையே அடித்தளமாகக் கொண்ட சமுதாயம் அமைக்கும் எனது பயணம் தொடர இந்த நாளில் உறுதியேற்கிறேன்!**

இந்நிகழ்ச்சியில் அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் அனைத்து அணி நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நாள் : 16.09.2025.

**தலைமைக் கழகம் தி.மு.க.**

### எஸ்.எஸ்.இராமசாமி படையாட்சியார்

# உழைக்கும் மக்களின் உரிமைகளுக்காக பாடுபட்டவர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

சென்னை, செப். 17-

விடுதலைப் போராட்ட வீரர் எஸ்.எஸ்.இராமசாமி படையாட்சியார் அவர்களின் 108ஆவது பிறந்த நாளையொட்டி, அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்திய பின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**இந்திய நாட்டின் விடுதலைக்குப் போராடிய வீரரும், முன்னாள் அமைச்சரும், உழைக்கும் மக்களின் உரிமைகளுக்காக முன்னின்ற சமூகநீதித் தலைவருமான ராமசாமி படையாட்சியார் அவர்களின் பிறந்தநாளில் அவரது பங்களிப்புகளைப் போற்றி வணக்கம் செலுத்தினேன்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### ஃபிடே கிராண்ட் செஸ் தொடரில் வைஷாலி வெற்றி!

# எண்ணற்ற இளம் பெண்களுக்கு ஊக்கம் தரும் வெற்றி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!

**சென்னை, செப். 17-**

**ஃபிடே கிராண்ட் செஸ் தொடரில் வெற்றி பெற்ற வைஷாலியை பாராட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-**

**உஸ்பெகிஸ்தானில் நடைபெற்ற ஃபிடே கிராண்ட் செஸ் தொடரில் தனது நிதானத்தாலும் அபார ஆட்டத்தாலும் வென்று, வெற்றி மகுடத்தைத் தக்கவைத்துக் கொண்டுள்ள ‘நம்ம சென்னைப் பொண்ணு’ வைஷாலி அவர்களுக்கு எனது பாராட்டுகள். இதன் மூலம் அவர் பெருமதிப்பு கொண்ட கேண்டிடேட்ஸ் (பெண்கள் பிரிவு) தொடருக்கும் தகுதிபெற்றுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.**

**இது வைஷாலியின் தனிப்பட்ட சாதனை மட்டுமல்ல, சென்னையின் வெற்றி, தமிழ்நாட்டுக்குக் கிடைத்த வெற்றி! இதைப் பார்த்து, உலக அரங்கில் நம்மாலும் நமது கனவுகளை நனவாக அரங்கேற்ற முடியும் என ஊக்கம் பெறும் எண்ணற்ற இளம் பெண்களின் வெற்றி!**

**இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது பதிவில் தெரிவித்துள்ளார்.**

### திருவண்ணாமலை தூய்மை அருணை சார்பில்

# மாதந்தோறும் கர்ப்பிணிப் பெண்களுக்கு வளைகாப்பு விழா!

## மாவட்ட ஆட்சித் தலைவர் க.தர்ப்பகராஜ் பரிசு பெட்டகங்கள் வழங்கி வாழ்த்தினார்!

*திருவண்ணாமலை, செப். 17-*

*திருவண்ணாமலை தூய்மை அருணை அமைப்பு சார்பில், தூய்மைப்பணி மரம் நடுதல், நீர் நிலை பராமரித்தலோடும், மாதந்தோறும் கர்ப்பிணிப் பெண்களுக்கு வளைகாப்பு விழா நடத்தப்பட்டுவருகிறது. இம்மாதத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் க.தர்ப்பகராஜ், கர்ப்பிணி தாய்மார்களுக்கு பரிசு பெட்டகங்கள் வழங்கி வாழ்த்துரை வழங்கினார்.*

*திருவண்ணாமலையில் தொண்டு செய்வோம், துணை நிற்போம் என்ற முழக்கத்தோடு கடந்த 7 ஆண்டுகளாக பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களை அமைப்பாளராகக் கொண்டு, தூய்மை அருணை திட்டம் செயல்பட்டு வருகிறது. தூய்மை அருணை திட்டத்திற்கு 4 மேற்பார்வையாளர்களும், 39 வார்டுக்கு 39 ஒருங்கிணைப்பாளர்களும், மாட வீதி தூய்மைப் பணிக்கு 7 ஒருங்கிணைப்பாளர்களும் ஒவ்வொரு வார்டுக்கும் 25 தூய்மைக் காவலர்கள் என ஆயிரக் கணக்கானோர் மரம் நடுதல், பராமரித்தல், கால்வாய் மற்றும் தூர்வாருதல் என செயல்பட்டு வருகின்றனர்.*

*அதனை தொடர்ந்து மாதந்தோறும் கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு விழாவை, ஜுலை மாதம் பொதுப்பணித்துறை அமைச்சர் தொடங்கி வைத்தார்.*

*நேற்று (16.09.2025 - செவ்வாய்கிழமை) காலை 10.30 மணிக்கு, திருவண்ணா மலை, காந்தி நகர் பைபாஸ் சாலையில் உள்ள நகர்ப்புற அருணை மருத்துவமனை வளாகத்தில், தூய்மை அருணை சார்பில், கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு விழா நடைபெற்றது.*

*விழாவிற்கு அருணை மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் குணசிங் தலைமை வகித்தார்.*

*அருணை கல்விக்குழுமங்களின் துணைத் தலைவர் எ.வ.வே.குமரன் முன்னிலை வகித்தார்.*

*தூய்மை அருணை மேற்பார்வையாளர் இரா.ஸ்ரீதரன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.*

*டாக்டர் ரவீணாபிரபு கர்ப்பிணி பெண்களுக்கு மருத்துவ ஆலோசனைகளை வழங்கி பேசினார்.*

*விழாவில் கலந்து கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் க.தர்ப்பகராஜ், கர்ப்பிணி பெண்களுக்கு பட்டுச்சேலை, இனிப்புகள், தின்பண்டங்கள் மற்றும் மங்கலப்பொருட்கள் அடங்கிய பெட்டகங்களை வழங்கி வாழ்த்திப் பேசினார்.*

*அவர் உரையாற்றும் போது... தூய்மை அருணை அமைப்பும், அருணை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும் இணைந்து இந்த அற்புதமான நிகழ்வை நிகழ்த்தி வருகிறார்கள். பிரசவம் என்பது அறிவியல், உளவியல், பண்பாடு ஆகியவற்றை உள்ளடக்கியது.*

*அறிவியல் என்பது மருத்துவர்கள் சம்மந்தப்பட்டது, உளவியல் என்பது உங்கள் மனம் சார்ந்து, நீங்கள் மகிழ்ச்சியாய் இருப்பது குறித்து, அடுத்து பண்பாடு என்பது ஆயிரம் ஆண்டு காலமாக பிரசவம் சார்ந்து நடைபெற்று வருவது.*

*இங்கே வருகை தந்திருக்கிற கர்ப்பிணி தாய்மார்கள் ஆண் குழந்தை, பெண் குழந்தை என்று பாகுபாடு பார்க்கக்கூடாது. இன்னும் கேட்டால் தமிழ்நாடு முதலமைச்சர் பெண்களுக்கான நலஉதவிகளைத் தான் அதிகம் நடைமுறைபடுத்தி வருகிறார். புதுமைப் பெண், மகளிர் உரிமைத் தொகை, மகளிர் விடியல் பயணம் என பெண்கள் சார்ந்தே அதிக அரசு திட்டங்கள் உள்ளது.*

*பெண்கள் அதிகம் பேசுவார்கள், ஆண்கள் குறைவாகத்தான் பேசுவார்கள். நீங்கள் தாய்வீடு சென்று வந்ததை பல நாட்கள் பேசுவீர்கள். ஆனால் ஆண்கள் தங்கள் பிரயாணத்தைப் பற்றி ஒருசில வார்த்தைகளில் முடித்துக் கொள்வார்கள். இது ஒரு மரபார்ந்த அறிவு. ஆதிகால வேட்டை சமூகத்தில் ஆண்கள் வேட்டைக்கு செல்வார்கள். பெண்கள் தங்கள் குடிலைப் பராமரிப்பார்கள். அவர்கள் அக்கம்பக்கம் உள்ளவர்களிடம் உரையாட வேண்டியிருக்கும்.*

*ஒரு பெண் குழந்தையிடம் ஒரு பொம்மையைக் கொடுத்தால், அதற்கு ஒரு பெயர் வைக்கும். அதனோடு விளையாடும். ஆனால், ஆண் குழந்தையிடம் ஒரு பொம்மையை கொடுத்தால், அந்த குழந்தை அதை அக்வேறு, ஆணிவேறாக பிரித்து பார்க்கும். ஆணால் ஒரு பணியைத்தான் கவனிக்க முடியும். பெண்களால் ஒரே நேரத்தில் பல பணியைப் பார்ப்பார்கள். இது அறிவியல் உண்மை.*

*பெண்கள் அளப்பறிய அறிவு உடையவர்கள். பெண் ஒரு ஆதி சக்தி. உங்கள் அனைவருக்கும் சிறப்பான எதிர்காலம் அமைந்திட வாழ்த்துகிறேன்.*

*இவ்வாறு பேசினார்.*

*நிறைவாக தூய்மை அருணை மேற்பார்வையாளர் பிரியா.விஜயரங்கன் நன்றி கூறினார்.*

*விழாவிற்கான ஏற்பாடுகளை மேற்பார்வையாளர்கள் டாக்டர் எ.வ.வே.கம்பன், ப.கார்த்திவேல்மாறன், இல.குணசேகரன் ஆகியோர் செய்திருந்தனர். நிகழ்ச்சியை மருத்துவமனைப் பொறுப்பாளர் இரா. சேஷாத்திரி ஒருங்கிணைத்தார்.*

*துணை மேயர் சு.ராஜாங்கம், டாக்டர் செல்வக்குமார், டாக்டர் பாலசந்தர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.*



திருப்பத்தூர் மாவட்டம் கந்திலி ஒன்றியம் நாகராசம்பட்டி, மட்றப்பள்ளி உள்ளிட்ட இடங்களில், ஒன்றிய செயலாளர் அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. புதிய நியாய விலைக் கடைகளை திறந்து வைத்தார். உடன் கே.ஏ.குணசேகரன், கே.ஏ.மோகன்ராஜ், திருமதி திருமுருகன் உள்ளிட்டோர் உடனுள்ளனர்.